# 2020 நன்றிகூரும் நாள் மாநாட்டுக்கான முக்கிய வாசகங்கள்

புதிய மனிதனுக்காகத் தம்மையேகொண்டு நம் கலாச்சாரத்தை இடமாற்றும் கிறிஸ்து சகலத்தையும் உள்ளடக்கிய, பரந்தகன்ற, முதன்மையான, தேவனுடைய பொருளாட்சியின் மையத்துவமும் பிரபஞ்சத்துவமுமான கிறிஸ்துவாக இருக்கிறார்.

நம்மிடம் சகலத்தையும் உள்ளடக்கிய பரந்தகன்ற கிறிஸ்துவின் தரிசனம் இருந்து, அவரை நம் ஜீவனாகவும் நம் முழு ஆள்தத்துவத்தின் ஆக்கக்கூறாகவும் நாம் அனுபவமாக்கி, நம் கலாச்சாரத்திற்குப் பதிலாக அவரை நாம் வாழும்போது, ஒரே புதிய மனிதன் நம் மத்தியில் ஒரு நடைமுறையான விதத்தில் தோன்றுவான், நாம் புதிய மனிதனின் வாழ்க்கையை நிஜமாக்குவோம்.

நம் கலாச்சாரத்தை இடமாற்றவும், புதிய எருசலேமைப்போல புதிதாவதன்மூலம் நிஜத்தில் புதிய மனிதனாக ஆகவும், உயிர்த்தெழும் ஜீவனின் பசுமையான நிரப்பீட்டைக்கொண்டு நாம் நாள்தோறும் புதிதாக்கப்பட வேண்டும்.

நாம், இயேசுவிலுள்ள நிஜமாகக் கிறிஸ்துவைக் கற்றுக்கொண்டு, நம் கலாச்சாரத்திற்குப் பதிலாக, ஒரே புதிய மனிதனின் வாழ்க்கையை வாழவேண்டும்; கர்த்தராகிய இயேசு பூமியில் எவ்வாறு வாழ்ந்தாரோ, அவ்வாறுதான் இன்று ஒரே புதிய மனிதன் வாழவேண்டும்.

*© 2020 Living Stream Ministry*

நன்றிகூரும் மாநாட்டுக்கான
செய்திகளின் செய்திக்குறிப்பு
நவம்பர் 26-29, 2020

## பொதுவான கருப்பொருள்:

## சகலத்தையும் உள்ளடக்கிய, பரந்தகன்ற கிறிஸ்து
## ஒரே புதிய மனிதனுக்காக கலாச்சாரத்தை இடமாற்றுதல்

செய்தி ஒன்று

### நம் கலாச்சாரம் சகலத்தையும்-உள்ளடக்கிய, பரந்தகன்ற கிறிஸ்துவால் இடமாற்றப்படுவதற்கான அவசர தேவை

வேத வாசிப்பு: கொலோ. 1:12-13, 15-18, 27; 2:8, 14-15; 3:4, 10-11

**I. கொலோசெயிலுள்ள சபை கலாச்சாரத்தால் வியாபிக்கப்பட்டிருந்ததாலும், பரிசுத்தவான்கள் கிறிஸ்துவிடமிருந்து கலாச்சாரத்தால் திசைதிருப்பப்பட்டதாலும் கொலோசெயர் புத்தகம் எழுதப்பட்டது—2:8, 16-17; 3:10-11:**

A. கொலோசெயில் கலாச்சாரம் சபையில் வெள்ளம்போல் பெருக்கெடுத்து, கிறிஸ்துவை இடமாற்றி, பரிசுத்தவான்களைக் கொள்ளைப் பொருளாக எடுத்துச் சென்றது—2:8.

B. தேவனின் எதிரி கிறிஸ்துவை இடமாற்ற கலாச்சாரத்தைப் பயன்படுத்துகிறான்; அவன் கிறிஸ்துவை இடமாற்ற கலாச்சாரத்தின் நல்ல அம்சங்களைப் பயன்படுத்த முயற்சிப்பான்—ஒப். பிலி. 3:4-8.

C. கொலோசெயர் புத்தகத்தின்படி, கிறிஸ்து கலாச்சாரத்தால் இடமாற்றப்படுகிறார்; கிறிஸ்துவை உச்சநிலையாக இடமாற்றுவது நம் கலாச்சாரமே என்று கொலோசெயர் சுட்டிக்காட்டுகிறது.

D. கொலோசெயரில் உள்ள இருளின் அதிகாரம் குறிப்பாகக் கலாச்சாரத்தின் நல்ல அம்சங்களையும், நம் இயற்கையான ஆள்தத்துவத்தையும் குறிக்கிறது—1:12-13:

1. கொலோசெயில் இருந்த பரிசுத்தவான்கள் கலாச்சாரத்தின் அதிஉயர்ந்த அம்சங்களை சபைக்குள் படையெடுக்க அனுமதித்ததன்மூலம் இருளின் அதிகாரத்தின்கீழ் வந்தனர்—2:8.
2. கலாச்சாரத்தின் அதிஉயர்ந்த தயாரிப்புகள் அதிஉயர்ந்தவை ஆயினும் இருளின் அதிகாரத்தின் அம்சங்களே, இவற்றின் மூலம் சாத்தான் மக்களைக் கட்டுப்படுத்துகிறான்—1:13.
3. கிறிஸ்துவுக்குப் பதிலீடாக இருக்கும் எதுவும் நம்மைக் கட்டுப்படுத்தும் இருளின் அதிகாரமாக ஆகிறது—வ. 13.

**II. மனிதனின் வீழ்ச்சிக்குப் பிறகு மனிதக் கலாச்சாரம் எழுந்தது—ஆதி. 4:16-22:**

A. தேவனின் பிரசன்னத்தை விட்டுச் சென்றபிறகு, காயீன் தன் பாதுகாப்பிற்காகவும், தன் பிழைப்புக்காகவும் ஒரு நகரத்தைக் கட்டினான்—வவ. 16-17:

1. இந்த நகரத்திற்குள் அவன் தேவன் இல்லாத ஒரு கலாச்சாரத்தை, தேவனற்ற ஒரு கலாச்சாரத்தை உருவாக்கினான்.
2. தோட்டத்தில் தேவன் மனிதனுக்கு எல்லாமாக—அவனது பாதுகாப்பாக, பராமரிப்பாக, நிரப்பீடாக, பொழுதுபோக்காக—இருந்தார்; மனிதன் தேவனை இழந்தபோது, அவன் எல்லாவற்றையும் இழந்தான்.
3. மனிதன் தேவனை இழந்தது மனித கலாச்சாரத்தைக் கண்டுபிடிக்க மனிதனைக் கட்டாயப்படுத்தியது, அவற்றின் முக்கியக் கூறுகளாவன: இருப்பதற்கான நகரங்கள், பிழைப்புக்குச் சம்பாதிப்பதற்காக கால்நடை வளர்ப்பு, அனுபவமகிழ்ச்சிக்காக இசை, பாதுகாப்புக்காக ஆயுதங்கள்—வவ. 20-22.

B. வெளிப்பார்வைக்கு, தேவன் இல்லாத ஒரு கலாச்சாரம் தேவனின் வழியில் செல்ல மறுத்து, தேவனை இழந்த மனிதனால் கண்டுபிடிக்கப்பட்டது; ஆனால் உண்மையில், அந்தக் கலாச்சாரத்தின் உள்ளார்ந்த காரணி தேவனிடமிருந்து விலகிச்சென்ற மனிதனுக்குள் தேவனின் எதிரியான சாத்தானின் தூண்டுதலும், ஏவுதலுமாகும்—வவ. 7, 16-17; மத். 12:26:

1. தேவன் இல்லாமல் இருந்ததும், சாத்தானுடன் ஒன்றிணைந்து இருந்ததுமான இத்தகைய ஒரு கலாச்சாரம், யுக யுகமாக எல்லா மனித கலாச்சாரங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் மாதிரியாக ஆனது, அதோடு, இந்தக் கலாச்சாரங்கள் தேவன் இல்லாமல் இருப்பதையும்,

சாத்தானைப் பின்பற்றி, சாத்தானுடன் ஒன்றிணைந்து இருப்பதையும் அடையாளப்படுத்துகிறது—ஒப். லூக். 4:6, அடிக்குறிப்பு 1.

2. தேவனற்ற கலாச்சாரம் ஆதியாகமம் 4இல் ஒரு விதையாக ஆரம்பித்தது, அது வெளிப்படுத்தல் 18இல் மகா பாபிலோனில் முடிவடையும்வரை மனித இனத்தின் வரலாறு முழுவதும் அபிவிருத்தியடையும்.
3. மத்தேயு 24:37-39இலுள்ள கர்த்தருடைய வார்த்தை, நோவாவின் காலத்தில் இருந்த தேவனற்ற கலாச்சாரம் கர்த்தருடைய வருகையின் காலத்தில் அதன் உச்சநிலைக்கு அபிவிருத்தியடையும் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

**III. கிறிஸ்துவும் சபையும் என்ற தேவனின் குறிக்கோளுக்கு கலாச்சாரம் ஒரு முட்டுக்கட்டை—எபே. 3:10-11; 5:32:**

A. கிறிஸ்து மற்றும் சபையின் வழியில் மிகவும் தந்திரமான ஒன்று நிற்கிறது; இந்தத் தந்திரமான எதிர்க்கும் மூலக்கூறு கலாச்சாரமே—கொலோ. 3:10-11; எபே. 2:14-15; கொலோ. 2:14-15.

B. கிறிஸ்துவை அனுபவிப்பதற்குக் கலாச்சாரம் ஒரு மாபெரும் முட்டுக்கட்டையாக இருக்கிறது; அறியாமலும், ஆழ்மனதிலும், நாம் கிறிஸ்துவின் அனுபவத்திலிருந்தும், அனுபவமகிழ்ச்சியிலிருந்தும் கலாச்சாரத்தால் தடுக்கப்படுகிறோம்—பிலி. 3:7-8.

C. நாம் எல்லாவற்றிலும் கிறிஸ்துவுக்குள்ளாக வளர்ந்து, முழு வளர்ச்சியடைந்த மனிதனை வந்தெட்டுவதை, நம் தந்திரமான, மறைவான கலாச்சாரம் தடுக்கிறது—கொலோ. 2:19; எபே. 4:13, 15-16.

**IV. மனித கலாச்சாரம் தேவனுடைய இராஜ்யத்திற்கு எதிராக நிற்கிறது—மத். 10:16-25, 34-39; 12:29, 46-50:**

A. தேவனுடைய இராஜ்யத்தை மனித கலாச்சாரம் எதிர்க்கிற அளவுக்கு அதைப் பாவ காரியங்கள் எதிர்ப்பதில்லை.

B. மனிதக் கலாச்சாரம் சாத்தானின் இராஜ்யத்தின் அடிப்படைப் பகுதியாகவும், பெரும் பங்காகவும் மாறிவிட்டது—வ. 26.

C. கலாச்சாரம் சாத்தானின் ஓர் அரணாகிவிட்டது; ஒரு தந்திரமான வழியில் அவன் கலாச்சாரத்தின்மீது ஒரு பிடியைத் தக்கவைத்துக்கொண்டு, தேவனுடைய இராஜ்யத்தை எதிர்ப்பதற்கு அதைப் பயன்படுத்துகிறான்—அப். 26:18; கொலோ. 1:12-13.

**V. சகலத்தையும்-உள்ளடக்கிய, பரந்தகன்றவராக கிறிஸ்து கலாச்சாரத்திற்கு எதிரானவர், அவர் நம் கலாச்சாரத்தைத் தம்மைக் கொண்டு இடமாற்ற வேண்டும்—வ. 18; 3:4, 10-11:**

A. கொலோசெயர் புத்தகத்தில் கிறிஸ்துவின் பரந்தகன்ற வெளிப்பாட்டின் குறிக்கோள் கலாச்சாரத்துடன் இடைபடுவதே ஆகும்—2:8; 3:10-11.

B. இந்தப் புத்தகத்தில் பவுல், சகலத்தையும்-உள்ளடக்கிய, பரந்தகன்ற கிறிஸ்து நம் கலாச்சாரத்தை இடமாற்ற வேண்டும் என்ற உண்மையை நமக்குள் பதியவைக்க இந்தக் கிறிஸ்துவைப் பற்றிய ஒரு தரிசனத்தை வழங்குகிறான்—1:27.

**VI. கலாச்சாரத்தை இடமாற்றும் கிறிஸ்து சலத்தையும் உள்ளடக்கிய, பரந்தகன்ற, முதன்மையான, தேவனுடைய பொருளாட்சியின் மையத்துவமும் பிரபஞ்சத்துவமுமான கிறிஸ்து—வவ. 15-18; 2:16-17; 3:4, 10-11:**

A. நம் கலாச்சாரத்தை இடமாற்றி, நமக்கு எல்லாமுமாக ஆகக்கூடிய கிறிஸ்து சகலத்தையும்-உள்ளடக்கிய, பரந்தகன்ற கிறிஸ்து—1:15, 18.

B. நம் கலாச்சாரத்துடன் இடைபடுகிற, நம் கலாச்சாரத்தைத் தம்மைக் கொண்டு இடமாற்றுகிற சகலத்தையும்-உள்ளடக்கிய, பரந்தகன்ற கிறிஸ்துவை வெளிப்படுத்துவதற்கே கொலோசெயர் புத்தகம் எழுதப்பட்டது—3:4, 10-11.

C. தம் இரட்சிப்பில் தேவன் நம்மைப் பாவம், நியாயத்தீர்ப்பு, அக்கினிக் கடல், உலகம், சுயம் ஆகியவற்றிலிருந்து இரட்சிப்பது மட்டுமல்லாமல், நம் கலாச்சாரம் உட்பட, கிறிஸ்துவை இடமாற்றும் எல்லாவற்றிலிருந்தும் நம்மை இரட்சிக்கிறார்—எபி. 7:25.

D. சகலத்தையும்-உள்ளடக்கிய, பரந்தகன்ற கிறிஸ்து நம்மில் இருக்கிறார், நம் முழு ஆள்தத்துவத்தை நிரப்பவும், நம் கலாச்சாரத்தைத் தம்மைக் கொண்டு இடமாற்றவும் நாம் அவரை அனுமதிக்க வேண்டும்—எபே. 3:17; கொலோ. 1:27; 3:11.

*© 2020 Living Stream Ministry*